*19*

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள நற்குணம்

## [கலாத்தியர் 5:22, 23]

*நாம் குடும்பத்தை அல்லது வீட்டை விவரிக்க வேண்டுமானால், "நாம் எப்படிப்பட்ட அடைமொழியை பயன்படுத்துவோம்?" "முறிந்துபோன"? "சஞ்சலம் நிறைந்த"? "காலம் கடந்த"? "கொடிதான"? "சந்தோஷமற்ற"? தேவன் விவரித்தாரானால் எப்படி விவரிப்பார்? ஒருவேளை அவர் "நல்லது" என்ற அடைமொழியை பயன்படுத்துவார். மனிதன் தனிமையாயிருந்தபோது "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" என்றார் (ஆதியாகமம் 2:18). பின்பு அவர் அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கினார். மனிதர் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்பதினால், மனிதனுக்கு அவள் குடும்பத்தில் ஒரு துணை "நல்லது" என்று கண்டார் என்று நாம் முடிவு செய்யலாம், நிச்சயமாக, குடும்பத்தின் முக்கியமான செயல்பாடு சிநேகம் நிறைந்த உறவு ஆகும். குடும்பம் என்பது நல்லது!*

*அப்படியானால், பின்பு, குடும்பத்தில் ஆவியின் கனியின் ஆறாவது பண்பை குடும்பத்தில் செயல்படுத்துவதில் நமக்கு பிரச்சனைகளே இருக்கக் கூடாது. அது "நற்குணம்." கலாத்தியர் 5:22, 23 சொல்வது, "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, <u>நற்குணம்</u>, விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (வலியுறுத்தம் என்னுடையது).*

*இந்த பாடத்தில் "ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பத்தை நற்குணம் எவ்வாறு வெற்றிகரமான குடும்பமாக ஆக்க உதவி செய்ய முடியும்" என்பதைப் பற்றி விவாதிப்போம்.*

### நற்குணம் என்றால் என்ன?

*நாம் தொடங்கும் போது, நாம் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். நற்குணம் என்பது ஆவியின் கனிகளில் ஒரு பங்கு ஆகும். நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் தமக்குள் வாசம் பண்ணுகிறார் என்பதால் நம் வாழ்க்கையில் நற்குணம் இருக்கிறது. அவர் அல்லது அவள் கிறிஸ்தவர்களாய் இருந்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் அவர் அல்லது அவளிடம் வாசம் செய்யும்வரை - எவர் ஒருவரும் - எந்த அளவிற்கு நல்லவர்களாய் இருக்க முடியுமோ அந்த அளவிற்கு - உண்மையிலேயே நல்லவர்களாய் இருக்கும்படி எதிர்பார்க்கக் கூடாது. இருப்பினும், நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கும்போது, நாம் குடும்பம் உட்பட எங்கிருந்தாலும் "நற்குணம்" நம்மை பண்புபடுத்தும் என்று எதிர்பார்க்கவேண்டும்.*

*இந்த சூழ்நிலை பொருத்தத்தில் பவுல் உபயோகப்படுத்திய கிரேக்க*

வார்த்தை "நற்குணம்." அதின் வடிவம் *agathos.* "நற்குணம்" என்பது "நீதியான பண்பு ஆகும்" என்று W. E. வைன் சொன்னார். அப்படியே (*agathos*) அகத்தோஸ் என்று விளக்கப்பட்ட பண்புச் சொல் என்பது "அதின் குணத்தில் அல்லது அமைப்பில் (நல்லது) என்பது இலாபகரமான பலன் ஆகும்" என்றும் அவர் கூடுதலாகக் கூறினார்.[1] இந்த வார்த்தை "உறுதியான பண்பை உள்ளடக்கியது, அதினால் மற்றவர்களுக்கு நன்மை செய்வது என்பது மென்மையான வழிகளில் இருக்க வேண்டியதில்லை."[2] J. B. லைட்புட், இந்த வார்த்தை மற்றவர்களுக்காக செய்யும் தயவான செயலை சுட்டிக்காட்டுகிறது என்று குறிப்பிட்டார்.[3]

இந்த வார்த்தையை உபயோகப்படுத்தும் இரண்டு பகுதிகள் அதை நாம் நன்றாக புரிந்துகொள்ள உதவும். ரோமர் 15:14 "என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்" என்று கூறுகிறது. எபேசியர் 5:9ல் பவுல் "(ஆவியின் கனி, சகல நற்குணத்திலும், நீதியிலும் உண்மையிலும் விளங்கும்)" என்று எழுதினார். நற்குணம் என்பது மாதிரியான கிறிஸ்தவ வாழ்வின் பங்காகும் மற்றும் அது அறிவோடு தொடர்புடையது மற்றும் அது மற்றவர்களுக்கு அறிவுரை கூறவும் அல்லது கண்டனம் செய்யவும் உதவுகிறது என்று நாம் காண்கிறோம். அதுமட்டுமல்ல, அது நீதிக்கும் மற்றும் சத்தியத்திற்கும் ஒத்திருக்கிறது. அது ஒளியிலிருப்பதும் அல்லது தேவன் மற்றும் அவருடைய வார்த்தையில் இணைந்திருப்பதின் விளைவாகவும் உள்ளது.

இப்படிப்பட்ட நற்குணம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் கிறிஸ்தவ குடும்பத்தின் பண்பாயிருக்க வேண்டும். அப்படி இருந்தால், எது தொடரும்?

## எவ்வாறு நற்குணம் குடும்பத்திலுள்ளவர்களிடம் செயல்படும்

*பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பத்தில் நல்லது செய்யும் நல்ல மக்கள் இணைந்திருப்பார்கள்.* இயேசு "தேவன் *ஒருவர் தவிர* நல்லவன் ஒருவனும் இல்லையே" என்று சொல்லும்போது, நல்லவர்களைப் பற்றிப் பேசுவது ஆச்சரியமாகப் படலாம் (மத்தேயு 19:17ஆ; வலியுறுத்தம் என்னுடையது); இருப்பினும் இந்த வார்த்தை மக்களைப்பற்றிக் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, நடபடிகள் 11:24அ வில் பர்னபா அவன் "நல்லவனும்" என்று அழைக்கப்பட்டிருக்கிறார். சரியாக சொன்னால் இந்த விசேஷித்த குணம் தேவன் ஒருவருக்கே உரியது, ஆனால் ஒன்று நாம் ஒரு அளவிற்கு பகிர்ந்து கொள்ளலாம். நாம் இந்த விஷயத்தில் தேவனுடைய சாயலுக்கு ஒத்திருக்க வேண்டும் (எபேசியர் 5:1 பார்க்கவும்).

அந்த ஐசுவரிய, இளம் அதிகாரி இயேசுவை "நல்லவர்" என்று அழைத்த உண்மையானது நல்லவராய் இருப்பது என்றால் என்ன என்பதைப் பற்றி சிலவற்றை சொல்கிறது.[4] எப்படி? குறைந்தது மூன்று வழிகளில்: (1) நல்லவராய் இருப்பது என்பது *தூய்மையாய் இருப்பது.* இயேசு பாவமில்லாதவராய் இருந்தார் (எபிரேயர் 4:15). (2) நல்லவராய் இருப்பது என்பது *நல்லது செய்வது.* இயேசு "நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார்" (நடபடிகள் 10:38). கலாத்தியர் 6:10ல்

வாசிக்கும் போது "யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்று காண்கிறோம். (3) நல்லவராய் இருப்பது என்பது *சத்தியத்தை பேசுவது.* இயேசு தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறியப்பட்டிருந்தார் (யோவான் 3:2). நடபடிகள் 11:24 - ன் படி, பர்னபா ஒரு நல்ல மனுஷனாய் இருந்தார். அவனுடைய நற்குணம் அநேகரை கிறிஸ்துவின் சபையில் சேர்ப்பதில் முடிந்தது. ஒருவர் மற்றவர்களை மனந்திரும்புவதற்குத் திரும்ப முயற்சிக்காமல் அவர்களை இழந்து போவதற்கு அனுமதித்தால், இயேசு நல்லவராய் இருந்தார் என்ற அர்த்தத்தில், அவர் நல்லவராய் இருக்க முடியாது.

இந்த அர்த்தத்தில் எப்படி ஒரு குடும்பம் தன் நற்குணத்தில் அறியப்படுவது? ஆவியானவர் வாசம் செய்யும் குடும்பத்தில் எவ்வாறு நற்குணம் வளரும்?

*முதலாவது, குடும்பத்தலைவர்கள் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.* நற்குணம் கிறிஸ்தவர்களை பண்புபடுத்துகிறது.

*இரண்டாவது, போதனை இருக்க வேண்டும்.* குடும்பத்திலுள்ள பிள்ளைகள் மற்றும் பெரியவர்கள் மற்றவர்களுக்கு உதவியாயும் மற்றும் தயவாயும், தங்களைப் பற்றி சிந்திப்பதற்கு முன்பு மற்றவர்களைப் பற்றி சிந்திக்கவும் மற்றும் சுத்தமாயும் மற்றும் தூய்மையாகவும் இருக்க கற்றுக் கொடுக்க வேண்டும். மேலும், இந்த போதனை ஒழுக்கத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். கூடுதலாக, போதனையானது வார்த்தையால் அறிவுரை கொடுப்பதை விட அதிகமானதாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் ஒரு உதாரணமாக வாழ்ந்து அவற்றை போதிக்க வேண்டும்.

*மூன்றாவது, குடும்பத்தில் நற்குணம் ஒரு பிரதான பண்பாய் கருதக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும்.* நாம் நம் பிள்ளைகளிடம் சொல்வது உண்டு, "உங்களால் உங்கள் பள்ளியில் பார்வைக்கு அழகுள்ளவர்களாய் இருக்க முடியாதிருக்கலாம், அல்லது நீங்கள் சிறந்த ஓட்டப்பந்தய வீரராய் இருக்க முடியாதிருக்கலாம்; ஆனால் நீங்கள் நேர்த்தியானவராய் இருக்க முடியும்." நாம் நல்லது செய்வதைப் பற்றி நம் பிள்ளைகளிடம் பேச வேண்டும். குடும்பமாக நாம் நம்முடைய அன்றாட செயல்களைக் குறித்து பேசும் போது நன்மை செய்வதை பிரதானப்படுத்தி பேச வேண்டும். நன்மை செய்யும் விஷயத்தில் பிள்ளைகளை உற்சாகப்படுத்தவும் மற்றும் வெகுமானம் கொடுக்கவும் வேண்டும். நம் பிள்ளைகள் பள்ளியில் சிறந்துவரும் போது அல்லது அவர்கள் சிறப்பான செயல்கள் செய்யும் போது நாம் அவர்களுக்கு வெருமானம் தராமல் இருப்பதுண்டா? அதுபோல நாம் அவர்கள் முதியவர்களுக்கு உதவி செய்யும் போதும் அல்லது மற்றவர்களுக்கு நல்ல செயல்கள் செய்யும் போதும் அவர்களை நாம் கௌரவிக்க வேண்டும்.

## எவ்வாறு நற்குணம் குடும்பத்திற்கு வெளியே உள்ளவர்களிடம் செயல்படும்

*உண்மையான நற்குணம் குடும்பத்திலிருக்குமானால், அந்த நற்குணம் குடும்பத்தை விட்டு வெளியே வழிந்து போகும்.* குடும்பமே உதவியின் ஒரு ஆதாரமூலமாகவும், சபை மற்றும் சமுகத்திலிருப்பவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் உலகம் முழுவதற்கும் ஒரு உரைவிடமாகவும் ஆகிறது.

*நற்குணம் நிறைந்த ஒரு குடும்பம் எப்படி இருக்கும்? வேதாகமம் அநேக உதாரணங்களை குறிப்பிடுகிறது.*

**வேதாகம உதாரணங்கள்**

*ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்.* நற்குணம் நிரம்பி வழியும் ஒரு குடும்பம் ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாளின் குடும்பம் போல இருக்கிறது. அவர்கள் பவுலின் உடன் வேலையாட்கள்; அவர்கள் "தொழில் செய்யும் ஊழியர்களாய்" இருந்தனர். அவர்கள் மற்றவர்களுக்கு போதித்தார்கள் (குறிப்பாக, அப்பெல்லோ [நடபடிகள் 18:24-26]), மற்றும் சபை அவர்கள் வீட்டில் கூடிற்று.

*1 தீமோத்தேயு 5:10 உள்ள பெண்.* நற்குணத்தை மாதிரியாக வைக்கும் குடும்பம் 1 தீமோத்தேயு 5:10 குறிப்பிடும் பெண்ணின் குடும்பம். அவள் "நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவள்." அவள் பிள்ளைகளை வளர்த்திருந்தாள் ... அந்நியரை உபசரித்திருந்தாள், ... "பரிசுத்தவான்களுடைய கால்களை கழுவியிருந்தாள் மற்றும் ... சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்திருந்தாள்."

*கண்காணிகளின் குடும்பங்கள்.* நற்குணத்தை வெளிப்படுத்துகிற குடும்பம் கண்காணிகளின் குடும்பம் போன்றது; அவர்கள் "அந்நியரை உபசரிக்கிறவர்களாய்" இருக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள் (1 தீமோத்தேயு 3:2).

*பிலேமோன்.* நற்குணத்தை பகிர்ந்து கொள்கிற குடும்பம் பிலேமோனின் குடும்பம் போன்றது. சபை அவன் வீட்டில் கூடினது (வசனம் 2). அவன் பரிசுத்தவான்களுடைய உள்ளங்களை இளைப்பாற பண்ணினான் (வசனம் 7) மற்றும் அவன்தான் அப்போஸ்தலர்களுக்கு தங்கும்படி ஓரிடத்தை ஆயத்தம் செய்யக் கூடியவனாய் இருந்தான் (வசனம் 22).

*காயு.* நற்குணம் உடைய குடும்பம் காயுவின் குடும்பம், அவர் சகோதரருக்கு வேலை செய்தார், குறிப்பாக அந்நியருக்கு, மற்றும் அவர்களை பிரயாணத்தின்போது வழிவிட்டு அனுப்பினார் (3 யோவான் 5-8).

*ஆபிரகாம்.* நற்குணம் என்ற பண்புக்கு உரிய குடும்பம் ஆபிரகாமின் குடும்பம் போல இருக்கிறது. அவர்கள் மூன்று அந்நியரை உபசரித்தவர்கள் (ஆதியாகமம் 18:1-8; எபிரெயர் 13:2 ஒப்பிடவும்).

**தற்கால உதாரணம்**

இந்த பண்பை மேலும் தெரிந்து கொள்வதற்கு, "உண்மை - வாழ்க்கை" உதாரணத்தை நாம் எடுத்துக் கொள்ளுவோம்:

*தேவனுக்காக ஒரு வீட்டை உபயோகப்படுத்துவது.* நாங்கள் தவறான மதத்திற்கு மாற்றம் அடைந்த ஒரு குடும்பத்தை சந்தித்தோம். அந்த குடும்பத்தின் தலைவன் அந்த மதத்தைக் குறித்து மிக உற்சாகமுள்ளவனாக மாறி அவன் வீட்டோடு ஒரு கூடுதல் அறையை கட்டினான். முக்கியமாக வேதபாடம் மற்றும் ஜெபம் நடைபெறுவதற்காகவே அதைக் கட்டினான். ஒரு கிறிஸ்தவ குடும்பம் அவர்கள் வீட்டில் "தீர்க்கதரிசிகளுக்கு என்று ஒருஅறை" கட்ட தீர்மானிக்கலாம் - ஒரு கூடுதல் அறை. அது விருந்தாளிகள் தங்குவதற்கு ஏதுவாயிருக்கும் (விசேஷமாக பிரசங்கியார்கள் வரும்போது) ஒரு அறை.

*தொழில் செய்யும் மிஷனரிகளாய் பணியாற்றுதல்.* ஆஸ்திரேலியாவுக்கு

சென்று, தொழில் செய்து கொண்டு மிஷனரிகளாயிருந்த ஒரு குடும்பத்தை எங்களுக்குத் தெரியும். அந்த மனிதர் அவர்கள் குடும்பத்திற்கு ஒரு வாகனம் வாங்கினார். அவர் அந்த வாகனத்தை பெரிதாக வாங்கி சபைக்கு கூடுதலாக மக்கள் ஏற்றிக்கொண்டு வருவதற்கு வசதிசெய்தார். அவர் தன் குடும்பத்தின் தேவைக்கு மேலான ஒரு தோட்டத்தை சபைக்கு வரும் மக்களும் அதில் பயன் பெறும் வண்ணம் ஏற்படுத்தினார். மற்றோரு குடும்பம், ஒரு ஆஸ்திரேலியா குடும்பம், குயின்ஸிலாண்டு என்னும் பட்டணத்திற்கு குடியேறினார்கள். அது சபைகள் இல்லாத இடம் என்பதால் அங்குசபையை நிறுவும்படி சென்றனர். இந்த பிதா தனக்கு சுய உதவி செய்து கொண்டு மற்றும் சபையின் செலவுகளையும் பார்த்துக் கொண்டார், மற்றும் அவரது குடும்பத்தார் தங்கள் வண்டிகள் பழுது பார்க்கப்படும் இடத்தை ஒரு சிறு "சபை கட்டிடமாக மாற்றினார்கள்" (ஞானஸ்நானத் தொட்டியுடன் முழுமைப்படுத்தினர்).

*தர்மகுணத்தை நடைமுறைப்படுத்துதல்.* டெட்ராய்ட், மிச்சிகன் என்ற இடத்தில் எங்களுக்கு ஒரு குடும்பத்தை தெரியும், அவர்கள் கூடைகள் செய்வதை பழக்கமாக கொண்டு அவற்றை ஏழைகள் அல்லது துணையற்ற மக்களுக்கு வருடத்தின் சிறந்த சமயங்களில் கொடுப்பது வழக்கமாக கொண்டிருந்தனர் (இது சபையின் பணியல்ல ஆனால் தங்கள் குடும்பத்தின் சார்பாக). அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் இதில் ஈடுபடுத்தினர். பல குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை இப்படிப்பட்ட உதவி செய்யும் விஷயங்களில் ஈடுபடுத்தியுள்ளனர். உதாரணமாக, பெற்றோர்கள் முதியவர்கள் அல்லது வியாதியஸ்தர்களை சந்திக்கப்போகும் போது தங்கள் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு போவார்கள்.

*விருந்தோம்பலை காண்பிப்பது.* சில குடும்பங்கள் தங்கள் குடும்பத்தில் விசேஷங்கள் மற்றும் கூடுகை நடக்கும் போது, குடும்பங்கள் இல்லாதவர்களை தங்களுடன் உணவு உண்ண அழைத்து குடும்பத்தின் உணர்வுகளை அவர்களுக்கு காண்பிக்க செய்வர். நான் வளர்ந்து வருகிற போது சபையில் சில ஸ்திரீகள் இருந்தனர். அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் போதுமான உணவு செய்து வைத்திருப்பார்கள். ஏனென்றால், சபையில் புதியவர்கள் யாராவது வருவார்களானால், அவர்களை தங்கள் வீட்டிற்கு இரவு உணவிற்கு அழைப்பார்கள். வந்தவர்களில் எவர் ஒருவரும் "அழைக்கப்படாமல்" இருந்ததில்லை. நான் ஒரு குடும்பத்தைப் பற்றி வாசித்த நினைவு உண்டு. எப்பொழுதும் தாங்கள் உண்ணும் மேசையில் கூடுதல் உணவு தட்டு ஒன்றும் இடமும் ஒதுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும், ஏனென்றால் உணவு சமயத்தில் யாராவது வருவார்களானால் அவர்களுக்காக அது தயாராக இருக்கும். சிலர் இவற்றையே செய்து வருகிறார்கள், அல்லது சிலர் உணவுக்காக அவர்களை உணவகத்திற்கு அழைத்து செல்வார்கள்.

*பிள்ளைகளுக்கான அக்கறை.* சில குடும்பங்கள் அனாதை பிள்ளைகளை வளர்ப்பு பிள்ளைகளாகவோ அல்லது தத்துப் பிள்ளைகளாகவோ சேர்த்துக் கொள்வார்கள், அப்படி செய்வதினால், அவர்கள் தங்கள் குடும்பத்தை நன்மை செய்வதற்கு உபயோகப்படுத்துகின்றனர்.

*சபை கூட்டங்களை நடத்துவது.* உலகத்தில் சில இடங்களில், சபை விசுவாசிகளின் வீட்டில் கூடுகிறது. எனக்கு ஒரு குடும்பத்தை தெரியும் பல ஆண்டுகளாக வாரக்கடைசிகளில் அவர்கள் வீட்டை விட்டு எங்கும்

செல்வதில்லை, ஏனென்றால் சபை அவர்கள் வீட்டில் கூடுவதினால்.

*போதிப்பது, பிரசங்கிப்பது மற்றும் தேவ பணி செய்வது.* பல குடும்பங்கள் தேவ பணி செய்வதை பிரதானமாக கொண்டுள்ளனர்: குடும்ப நபர்கள் பலர் முக்கியமான குறிப்பாக வைத்திருக்கிறது என்னவென்றால் ஊழியர்களுக்கு எழுதுவது அல்லது அவர்களுக்கு பொருளாதாரத்தில் உதவுவது அல்லது உலக வேதாகம பள்ளிகளில் இணைந்து உதவி செய்வது போன்றவைகளை முக்கியமானதாய் கொண்டுள்ளனர். மற்றவர்கள், குடும்பமாக, தனிப்பட்ட ஊழியர்களை தாங்குவது - தங்கள் வீடுகளில் "வேதபாட வகுப்பு" நடத்துவது, தங்கள் பிள்ளைகளை கூட்டிக் கொண்டு பக்கத்தில் நடக்கிற கூட்டங்களுக்கும் மற்றும் தூர தேசத்திற்கும், செல்வது போன்றவற்றைச் செய்கின்றனர். மற்ற குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளை வேத வகுப்புகள் நடத்துவதில் ஈடுபடுத்துகின்றனர்.

**நம்முடைய குடும்பத்தை தேவனுடைய பணிக்கு உதவுவதில் தடைகள்**

மேலே சொல்லப்பட்ட உதாரணங்களை நம்முடைய குடும்பத்தில் செயல்படுத்துவதற்கு அதாவது தேவனுக்கென்ற நம்முடைய குடும்பத்தை உபயோகப்படுத்துவதற்கு எந்த காரியங்கள் தடையாயிருக்கிறது? அநேகமாக, மூன்று காரியங்கள் இப்படிப்பட்ட ஈடுபாடுகளை தவிர்க்கிறது.

*குடும்பம் என்ற உணர்வு இருப்பதில்லை.* நாம் ஒரு "குடும்பம்" என்கிற உணர்வுகளை இழந்து விட்டோம் என்பதால் இப்படி இருக்கக் கூடும். ஒரு போதும் குடும்பமாக அமர்ந்து உண்ணுவது இல்லை அல்லது ஒன்றாக சேர்ந்து எந்த ஒரு காரியத்தையும் செய்வது இல்லையென்றால் பின்பு எப்படி நம் எல்லாருக்கும் நாம் ஒரே குடும்பம் என்ற உணர்வு வரும்? சபையும் ஒரு குடும்பம் தான்; நமக்கு ஒரு பெரிதான நோக்கும் உண்டு. அதாவது நாம் இருக்கிறோம் என்பதை சபையில் உள்ள மக்களுக்கும், மற்றும் சமுதாயத்திற்கும் மற்றும் உலகம் முழுவதும் நாம் நன்மை செய்து காண்பிக்க வேண்டும்.

*சுய நலமுள்ளதன்மை.* நம்முடைய சுயநலம் நல்லதை வெளிப்படுத்துகிற குடும்பமாக மாறுவதற்கு தடைசெய்கிறது. நாம் நம்மைப் பற்றி மட்டுமே பார்த்துக் கொள்ளும் போது - நமது ஆரோக்கியம் அல்லது நமது பிள்ளைகள், நமது பிரச்சனை, நமது செலவு, மற்றும் நமது உலகப்பிரகாரமான இலக்குகள் - பின்பு நாம் மற்றவர்களுக்கு உதவுவதற்கு சமயம் செலவிடவோ அல்லது பிரயாசப்படவோ மாட்டோம்.

*அற்பமான முன்னுரிமைகள்.* தவறான முன்னுரிமைகள் நாம் குடும்பமாக, மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் இருந்து நம்மை தூரமாய் வைத்துவிடும். கிறிஸ்தவ குடும்பத்தில் இன்று பெரிதாக இருக்கிற பிரச்சனைகள் தகாத முன்னுரிமைகள் ஆகும் - வியாபாரம், பணம், ஆரோக்கியம், படிப்பு, விளையாட்டு, சொத்துகள், உலகத்திலுள்ள வெற்றிகள், அழகு, புகழ், வேடிக்கை அல்லது பொழுதுபோக்கு - போன்றவைகள் நாம் நல்லவர்களாய் இருப்பதையும் நல்லவற்றைச் செய்வதையும் விட முக்கியமானதாய் ஆகிவிட அனுமதிக்கக் கூடாது. நம்முடைய குடும்பத்தில் கிறிஸ்துவே மிக முக்கியமானது என்பதை நாம் உருவாக்க வேண்டும். நாம் நற்குணம் என்ற ஆவியின் கனியை பெற நம்பினோமானால் மற்றும் உண்மையான கிறிஸ்தவ குடும்பமாக ஆவியானவர் வாசம் செய்யும் இடமாக - குடும்பம் நற்குணம் என்ற பண்பினால் நிறைந்திருக்க

வேண்டுமானால் நம் குடும்பத்தில் கிறிஸ்தவத்தை மேலான முன்னுரிமையாக ஆக்கவேண்டும்.

## முடிவுரை

ஜேம்ஸ் ஓ. பேய்ர்டு[5] ஒரு நாள் அந்த குறிப்பிட்ட பிராந்திய சபையில் ஞாயிறு அன்று பிரசங்கித்தார். அந்த சபையும் மற்றும் அதன் நிகழ்ச்சிகளும் அவர் மனதில் அழுத்தமாக பதிந்து போயின.

அந்த பிராந்திய சபையில், ஒருவருக்கு ஒருவர் அன்பு காட்டுவது தெளிவாகக் காணப்பட்டது மற்றும் சபையினிமித்தம் அவர்கள் கொண்டுள்ள வைராக்கியம் தெளிவாக காணப்பட்டது என்று அவர் சொன்னார். அந்த சபையை வழிநடத்துபவர்கள் எல்லா மக்களும் ஈடுபாடோடு பங்கு கொள்ளும் செயல் வடிவ நிகழ்ச்சிகளை ஆயத்தம் செய்திருந்தார்கள், மற்றும் அந்த சபை சமுதாயத்திலும் மற்றும் உலகம் முழுவதும் எட்டக் கூடிய அளவிற்கு இருந்தது. தொடர்ச்சியாக, அந்த சபை வளர்ந்து கொண்டிருந்தது. அந்த ஞாயிறு காலையில் அந்த சபையின் எண்ணிக்கை மற்றும் குடும்பங்களின் தரமும் தன்னை வெகுவாக கவர்ந்தது என்றார் சகோதரர் பேய்ர்டு.

ஆராதனைக்கு பின்பு அவர் ஒரு சிறந்த குடும்பத்தோடு அவர்கள் வீட்டிற்கு உணவு உண்ண சென்றார். இந்த மக்கள் அவர் காலையில் கண்டதை உறுதி செய்தனர். அந்த குடும்பத்தில் கிறிஸ்தவ பெற்றோர்கள் மற்றும் அற்புதமான கிறிஸ்தவ வாலிபப்பிள்ளைகளும் இருந்தனர்.

அந்த மத்தியானத்தில் அவர்களின் கிறிஸ்தவ பண்புகளை அவர் கண்ட போது, முதலாவது அவர் சிந்தனைக்கு வந்தது, "நல்ல சபைகள் சிறந்த நல்ல குடும்பத்தை உருவாக்கும்" என்பது தான் அந்த நாள் கடந்து செல்லச் செல்ல அவர் அந்த குடும்பத்தை மேன் மேலும் கண்டு அந்த மக்களின் நற்குணத்தால் வெகுவாக கவரப்பட்டார். இன்னும் மற்றொரு காரியம் அவர் சிந்தனைக்கு வந்தது; "நல்ல குடும்பங்கள் நல்ல சபைகளை உருவாக்குகிறது." பின்பு அவர் சொன்னது, "இந்த இரண்டு கோட்பாடுகளும் முரண்பாடு உள்ளது அல்ல, இரண்டும் உண்மையே. நல்ல சபைகள் நல்ல குடும்பங்கள் உருவாவதற்கு உதவுகிறது, மற்றும் நல்ல குடும்பங்கள் நல்ல சபைகளை உருவாக்க உதவுகிறது," அவர் மிகவும் சரியாக சொன்னார்! அநேகமாக நாம் சபைக்கு உதவக் கூடிய மிக சிறந்த காரியம் என்பது நாம் இன்று மேலான கிறிஸ்தவர்களாய் இருப்பதற்கு. நம்முடைய குடும்பங்களை சிறந்த முறையில் ஆக்குவது என்பதே.

உங்கள் குடும்பத்தை எப்படி விவரிக்கமுடியும்? அது ஒரு "நவீன குடும்பம்" அல்லது ஒருவேளை ஒரு "நன்கு அலங்கரிக்கப்பட்டகுடும்பம்"? உங்கள் குடும்பத்தை சந்திப்பவர்கள் அவற்றை "சுறு சுறுப்பான குடும்பம்" அல்லது ஒரு "சந்தோஷமான குடும்பம்" என்று சொல்வார்களா? மிக முக்கியமாக அது ஒரு "நல்ல குடும்பமாக" இருக்கிறதா? உங்கள் குடும்பத்தில் "நற்குணம்" நிறைந்திருக்கிறதா?

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 273-74. [2]Ibid,

274; *ஒரு மனிதன் அவனுடைய “நற்குணம் மற்றும் சத்தியத்திற்கு உள்ள வைராக்கியத்தை கடிந்து கொண்டு, திருத்தி, தண்டித்து” வெளிப்படுத்தலாம்.* (Richard C. Trench, *Synonyms of the New Testament* [London: N.p., 1880; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1953], 234.) [3]*ஜே. பி. லைட்புட், கலாத்தியருக்கு எழுதின பவுலின் நிருபம்* (Doublin: Trinity College, 1865; reprint, Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1968), 213. Lightfoot *குறிப்பிட்டது “பொறுமை” என்பதை “எதிர்க்காத,” என்றும், “தயவு” என்பதை “நடுநிலை” என்றும் மற்றும் “நற்குணம்” என்பதை “செயல்படும்” என்றும் குறிப்பிட்டார். “வேறு வார்த்தையில் சொல்வோமானால் ‘நற்குணம்’ என்பது ‘தயவின்’ செயல் வடிவமாகும்.”* [4]*காண்க யோவான் 7:12 இவர் ஒரு நல்ல மனிதர்.* [5]James O. Baird, presentation at the Blacktown church of Christ, Sydney, Australia, in the 1970s. Baird was chancellor (former president) of Oklahoma Christian University.